**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

# TAMIL VIRTUAL ACADEMY

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**

**HG20 – நிலை II – (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**

**ஜூலை – ஆகஸ்டு 2020**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 =10)**

1. திருவருட்பாவில் எத்தனை பாடல்கள் உள்ளன?
2. சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைபெறும்?
3. பாரதிதாசன் எவ்வாறு அழைக்கப் பெற்றார்?
4. செவிவழி வரும் பாடல்களை எவ்வாறு அழைப்பர்?
5. 'கவிதை உள்ளம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
6. இந்திய விடுதலைக்குத் தொடக்க வித்தாக அமைந்தது எது?
7. நசை என்பது சொல்லிசை அளபெடையில் எவ்வாறு மாறி வரும்?
8. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?
9. உடம்படு மெய்யாக வரும் எழுத்துக்கள் எத்தனை?
10. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. உலகம் நன்று என்பதற்குக் கண்ணதாசன் காட்டும் உவமைகள் யாவை?
2. அறிவின் இலக்கணம் யாதெனத் திருக்குறளில் குறிப்பிடப்பட்டுள்ளது?

3. பழமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள நாய் பெற்ற தேங்காயை விளக்குக?
4. குகன் தான் கொண்டு வந்த பொருட்களின் மூலம் இராமனுக்கு உணர்த்தியது யாது?
5. குலோத்துங்க சோழன் பெற்ற சிறப்புப் பெயர்கள் யாவை?
6. 'முரசு' என்ற தலைப்பில் பாரதியார் எவ்வகைக் கருத்துக்களைக் கூறியுள்ளார்?
7. எவை இன்பம் பயக்கும் என்று கவிஞர் சுரதா தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார்?
8. 'தாலாட்டுப் பாடல்' பெண்களின் பண்புகளாகக் குறிப்பிடுவது எவற்றை என விவரி.
9. திருவேங்கடமலையைக் குலசேகர ஆழ்வார் எவ்வாறு வர்ணிக்கிறார்? அவரது அவா யாது?
10. திரு.வி.க. அவர்கள் எழுதிய நூல்களில் மூன்றினைக் குறிப்பிடுக.
11. பருத்திப்பூவே சிறந்தது என்று அமைச்சர் நலம் விரும்பி கூறியதற்குரிய காரணம் என்ன?
12. பதம் என்பது யாது?
13. திசைப்பெயர்ப் புணர்ச்சி என்பது யாது?
14. அணி என்ற அமைப்பைப் புலவர்கள் ஏன் பயன்படுத்துகின்றனர்?
15. கருப்பொருள்கள் என்று எவை குறிப்பிடப்படுகின்றன?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. கா. நமச்சிவாயர் அவர்கள் எழுதிய மொழி வாழ்த்தின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
2. நும் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள திருக்குறள் பகுதியிலிருந்து கல்வியின் சிறப்பைப் பற்றி ஏதேனும் இரு குறள்களின் கருத்துக்களை வரைக.
3. இராமபிரான் குகனின் அன்பு குறித்து வியந்து கூறியது யாவை?
4. முசுகுந்தச் சக்கரவர்த்தியைப் பற்றி ஒட்டக்கூத்தர் மூவருலாவில் கூறுவது என்ன?
5. பாரதிதாசனைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
6. சிவனைக் குறித்து நாவுக்கரசர் பாடிய பதிகத்தின் கருத்தை விளக்கமாக எழுதுக.
7. சரக்கு வண்டிகளின் பயன்களை விளக்குக.

8. ஆகுபெயரின் வகைகள் எத்தனை? அவற்றில் ஏதேனும் நான்கு பெயர்களை மட்டும் குறிப்பிடுக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. முதலாம் குலோத்துங்கச் சோழன் மற்றும் கருணாகரத் தொண்டைமான் ஆகியோரைப் பற்றி குறிப்பு வரைக.
2. கபிலரும், பாரியும் கண்டு களித்த கலைவிழாவை விவரிக்கவும்.
3. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை? உதாரணத்துடன் ஒரு வகையை விளக்கி, ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை வரையறுக்கவும்.

**பகுதி – உ**

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் இயற்றிய இரட்டுற மொழிதல் பாடலை விளக்குக.
2. சித்தன்னவாசலின் சிறப்புகள் நாட்குறிப்பில் எவ்வாறு விவரிக்கட்டுள்ளன?

******